**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 559/ 2024 |
| Deposition of Witness for | : | PW. 3 (LW-1 ) |
| Name | : | பிரசுதா |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 03rd day of February 2026.**

**முதல் விசாரணை:**

நான் கரூரில் வசிக்கின்றேன். இல்லத்தரசியாக இருக்கின்றேன். எனது கணவர் பெயர் பிரபாகரன். எனது கணவர் சோமூரில் மளிகை கடை வைத்து நடத்தி வந்தார். 06.05.2024–ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் எனது கணவர் கடையை மூடிவிட்டு TN 47 7531 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heavy duty வாகனத்தில் பஞ்சமாதேவி அருகில் காலி மனை அருகாமையில் அவருக்கு பின்னால் வந்த யமாகா வாகனம் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளது. எனது கணவர் கீழே விழுந்து உடலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. பாலசந்திரன் என்ற ஒரு நபர் எனது கணவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு செல்போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான் புறப்பட்டு கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவர் மயக்கமாக நிலையில் இருந்தார். மருத்துவர்கள் பரிசோதித்து எனது கணவர் இறந்துவிட்டதாக சொல்லிவிட்டார்கள். யமாகா வாகனத்தை ஓட்டிய நபரின் பெயர் திலீப்குமார் என்று கூறினார்கள். எனது கணவர் இறந்தபின்னிட்டு நான் வெங்கமேடு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **புகார் அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பாலசந்திரன் என்பவர் எனக்கு ஏற்கனவே பழக்கமான நபர் இல்லை. ஹேமருத்ரா எனது மகள் ஆவார். கிரிஜா என்பவர் எனது தாயார் ஆவார். திவ்யா என்பவரை தெரியாது. மதன்குமார் எனது மருமகன் ஆவார். சாட்சிகள் விமலேஷ், வினோத்குமார் ஆகியோர்களை எனக்குத் தெரியாது. புகாரில் மோட்டார் சைக்கிளுக்கு பின்னால் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது. பாலசந்திரன் என்பவர்தான் என்னை செல்போனில் தொடர்பு கொண்டார். எந்த செல்போன் எண்ணிலிருந்து அழைப்பு வந்தது என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை.

விபத்து யார் தவறால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. விபத்து இரவு 9.30 மணிக்கு நடைபெற்றது. எனது கணவர் இரவு இறந்துவிட்டார். அங்கிருந்துவிட்டு மறுநாள் காலை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பாலசந்திரன் என்பவர் நான் மருத்துவமனை சென்றபோது இரவில் அங்கிருந்தார். நான் சம்பவத்தை நேரில் பார்க்காமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |